# பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம் சின்னதாமல் செருவு ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## பிறப்பிப்பவர் J.ராஜமாணிக்கம்

க.எண். 27 /2024 நாள் 12 / 06/2024

பொருள் : ஊராட்சி நிர்வாகம் - குடியிருப்பு மனைப்பிரிவு - பத்திரப்பதிவு அனுமதி - வேலூர் மாவட்டம் - பேர்ணாம்பட்டு வட்டம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பேர்ணாம்பட்டு ஊராட்சி சின்னதாமல்செருவு கிராமம் சர்வே எண்கள்.**139/3B2, 139/3C1** ஏக்கர் 2.22 சென்ட் பரப்பளவில் அமைய உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு இறுதி அங்கீகாரம் மற்றும் பத்திர பதிவு அனுமதி வழங்கி ஆணையிடல் - சார்பு.

பார்வை :

1) திரு.திருநாவுக்கரசு மற்றும் 5 நபர்கள் அவர்களின் கடிதம் நாள் 15.12.2023
2) அரசாணை நிலை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகரமைப்பு துறை, நாள் 04.05.2017
3) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகரமைப்பு துறை, நாள் 13.10.2017
4) அரசாணை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகரமைப்பு துறை, நாள் 05.02.2019
5) உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம், அவர்களது கடிதம், ந.க.எண்.ROC NO. VLR/P513V5X4/27/2024TCP, நாள் 29.04.2024, மற்றும் **SWP/DTCP/VELLORE/LAYOUT No.42/2024**
6) ஊராட்சி மன்ற தீர்மான எண்.....10.....................நாள் ......12.06.24

__ஆணை :__

வேலூர் மாவட்டம் - பேர்ணாம்பட்டு வட்டம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பேர்ணாம்பட்டு ஊராட்சி சின்னதாமல்செருவு கிராமம் சர்வே எண்கள்.139/3B2, 139/3C1 ஏக்கர் 2.22 சென்ட் பரப்பளவில் திரு.திருநாவுக்கரசு மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமான நிலத்திற்கு பார்வை 5-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி குடியிருப்பு மனைகளாக அங்கீகரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | | பரப்பளவு சதுரடி மீட்டரில் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | : | 8983.73 ச.மீ (அ) 2.22 ஏக்கர் | |
| 2 | தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைகள் | : | 69 | |
| 3 | உத்தேச சாலைகள் மற்றும் மூலை மட்க்குகளின் அளவு | : | 2732.05 ச.மீ | |
| 4 | உள்ளாட்சிக்கான பொது உபயோகம் (PP) | : | 46.50 ச.மீ | 0.74% |
| 5 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது | : | 49.50 ச.மீ | 0.78% |
| 6. | பூங்கா இடம் | : | | |
| 7. | ஊராட்சி மற்றும் மின்சார வாரியம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் நீங்கலாக | : | 6251.68 ச.மீ | |

மேலும் ஊராட்சி மற்றும் அரசு தலைப்பில் செலுத்திய கட்டணங்கள் விவரம் :

| வ. எ ண். | கட்டண விவரங்கள் | அரசின் கட்டண நிர்ணய விவரம் | விதிக்கப்படும் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | ஆராய்வு கட்டணம் | ஒரு மனைக்கு ரூ.1,000/- (68 x 1,000) | ரூ.68,000/- ஊராட்சி பொது நிதி கணக்கு எண்.1 |
| 2. | நிலம் விட்டு மனையாக மாற்றியமைக்கான கட்டணம் | பதிவு துறையின் வழிகாட்டி மதிப்பிற்கு 3% மிகாமல் விதிக்கப்பட வேண்டும் | ரூ.13,500/- |
| 3. | அங்கீகார கட்டணம் | 2.20 x 1,000 (ஒரு ஏக்கருக்கு ஆயிரம் வீதம்) | ரூ.1,000/- |

உள்ளாட்சி அமைப்பிற்கு சாலை மற்றும் இதர வசதிகள் அமைக்க ஏதுவாகக் தான பத்திரம் எண். 12/17 பதிவு நாள் 28.03.2024 வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு இறுதி அங்கீகாரம் மற்றும் மனைகளுக்கு பத்திரப்பதிவு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

தலைவர்
[illegible]
பேர்ணாம்பட்டு ஒன்றியம்
பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.

பெறுநர் :

1. திரு.திருநாவுக்கரசு மற்றும் 5 நபர்கள்
2. சார்பதிவாளர்
   பேர்ணாம்பட்டு சார்பதிவாளர் அலுவலகம், வேலூர் மாவட்டம்.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

நகல் பணிவு : உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம்.

நகல் பணிவு : உதவி இயக்குநர், நில அளவை துறை, வேலூர் மாவட்டம்.

நகல் பணிவு : தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம்

No.1A, 1st Floor, Gandhi Irwin, Bridge, Egmore, Chennai.

நகல் பணிவு : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வேலூர் மாவட்டம்.